தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
Website: www.tnlbo.tn.gov.in
முன்னிலை : திரு மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.194/மா/2024,
நாள் 17.11.2025

மா. சிவராஜ்,
சென்னை. .................. முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், .................. எதிர் மனுதாரர்
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி.

சென்னை, கோடம்பாக்கம், வரதராஜப்பேட்டை மெயின் ரோடு, கதவு எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மா.சிவராஜ் என்பவரின் 27.09.2024 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 20.09.2024 அன்று பெறப்பட்டு, 194/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:–

## ஆணை

சென்னை, கோடம்பாக்கம், வரதராஜப்பேட்டை மெயின் ரோடு, கதவு எண்.8 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.மா.சிவராஜ் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவி ஆணையருக்கு அனுப்பியுள்ள 27.09.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:–

“என் வீட்டில் இருந்து சுமார் ஆயிரம் மீட்டர் தொலைவில். கதவு எண் 21 ப.எண்.7 நெற்குன்றம் 1st street. வடபழனி சென்னை–26 என்ற முகவரியில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் தளம் ஒன்றுக்கு சுமார் 6 ஆயிரம் சதுரஅடி என நான்கு தளம் கட்டிடம் கட்டப்பட்டது. தரை தளத்தில் வணிக வளாகமும், அதற்கு மேல் மூன்று தளத்தில் பார்கிங் வசதிகள் இல்லாமல், கட்டிடத்தை சுற்றி நான்கு புற இடைவெளிகள் இல்லாமல், அக்ஷயா திருமண மண்டபம் கட்டப்பட்டு, இயங்கி வருவதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகை படத்தில் காணலாம். கடந்த 07.05.2023 அன்று என் வீட்டருகே வசிக்கும் V.சிவா, C.கவிதாஜெனிபர் நபர்களுக்கு திருமணம் என்பதால் அந்த மண்டபத்திற்கு நானும் எனது நண்பர்களும் சென்றோம். இரு சக்கர வாகனம் நிறுத்தக் கூட அங்கு பார்கிங் வசதி இல்லாததால், எங்கள் வாகனங்களை சாலையில் நிறுத்தும் நிலை ஏற்பட்டது. தரை தளத்தில் உள்ள வணிக வளாகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களும், வாகனங்களை சாலையில் நிறுத்தி இருந்ததால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. முதல் தளத்தில் உள்ள திருமண ஹாலுக்கு சென்றோம். சிறிய கதவு இருந்ததால், கூட்ட நெரிசலில் மூச்சு திணறல் ஏற்பட்டது. அதற்கு மேல் தளத்தில் உள்ள டைனிங் ஹாலுக்கு சென்றால் காற்று வசதியில்லாமல் மேலும் மூச்சு திணறல், கண் எரிச்சல் ஏற்பட்டது. அங்கு ஏதேனும் தீ விபத்து

ஏற்பட்டால், மனிதர்கள் உயிர் தப்பி வெளியேற இயலாது. இதனால் உயிர் சேதங்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. தீயணைப்பு கருவிகளும் அக்கட்டிடத்தில் பொறுத்தவில்லை. முறையான CMDA அனுமதி பெற்று இக்கட்டிடம் கட்டப்பட்டதா என்று தெரிந்துக் கொள்ள கடந்த 08.05.2023 அன்று RTI மனு அளிக்கப்பட்டது. 25.05.2023 அன்று எவ்வித அனுமதியும் வழங்கவில்லை என்று பதிலளிக்கப்பட்டது. மனித உயிர்களை காக்க இக்கட்டிடத்தை இடித்து பார்கிங் வசதியுடன் கட்ட பொதுநலன் கருதி இம்மனு அளிக்கப்படுகிறது என்று புகார் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர், மண்டலம் 10, கோடம்பாக்கம், சென்னை–26 அவர்களிடம் இம்முறைமன்ற நடுவ 22.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

3.பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளர், மண்டலம் 10, கோடம்பாக்கம், சென்னை–26 அவர்கள் தனது 04.06.2025 நாளிட்ட கடிதம் ம.அ.10 ந.க.எண்.1500456/2005–ல் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10 பகுதி 29 கோட்டம் 130க்கு உட்பட்ட கதவு எண்.21/7, நெற்குன்றம் 1வது தெரு. வடபழனி, சென்னை–26 உள்ள இக்கட்டிடத்தின் மீது சமூக ஆர்வலர் திரு.சிவராஜ் அளித்த புகாரின் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட கட்டிடம் 14.6.1999 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடம் 24 வருடம் பழமை வாய்ந்ததாகும். மேலும் அனுமதிக்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் 27.06.2023 அன்று Calling for approved plan தாக்கீது வழங்கப்பட்டது. தனியர் அவர்கள் 22.06.2012 அன்று சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் முறைபடுத்துவதற்கு விண்ணப்பித்துள்ளார். வரன்முறை படுத்துவது குறித்து இந்நாள்வரை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் இருந்து முறைபடுத்த ஆணை ஏதும் பெறப்படவில்லை. மேலும் கட்டிடம் வரன்முறை படுத்துவதற்காக அளிக்கப்பட்ட விண்ணபத்தின் தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலிருந்து பதில் பெற்றவுடன் அதனடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்”.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 23.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5.மனுதாரர் 07.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“சென்னை வடபழனி, நெற்குன்றம் முதல் தெரு கதவு எண் 21 ப.எண்.7 என்ற முகவரியில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன் தளம் ஒன்றுக்கு சுமார் 6 ஆயிரம் சதுரஅடி என நான்கு தளம் கொண்ட மண்டபம் கட்டப்பட்டது. தரை தளத்தில் வணிக வளாகமும், அதற்கு மேல் மூன்று தளத்தில் பார்கிங் வசதிகள் இல்லாமல், கட்டிடத்தை சுற்றி நான்குபுற இடைவெளிகள் இல்லாமல், அக்ஷயா திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. கடந்த 07.05.2023 அன்று அந்த மண்டபத்தில் நடந்த திருமணத்திற்கு நானும் எனது நண்பர்களும் சென்றோம். இரு சக்கர வாகனம் நிறுத்தக் கூட அங்கு பார்கிங் வசதி இல்லாததால், எங்கள் வாகனங்களை சாலையில் நிறுத்தும் நிலை ஏற்பட்டது. தரை தளத்தில் உள்ள வணிக வளாகத்திற்கு வரும் வாடிக்கையாளர்களும், வாகனங்களை சாலையில் நிறுத்தி இருந்ததால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. முதல் தளத்தில் உள்ள திருமண ஹாலுக்கு சென்றோம். சிறிய கதவு இருந்ததால், கூட்ட நெரிசலில் மூச்சு திணறல் ஏற்பட்டது. அதற்கு மேல் தளத்தில் உள்ள டைனிங் ஹாலுக்கு சென்றால் காற்று வசதியில்லாமல் மேலும் மூச்சு திணறல், கண் எரிச்சல் ஏற்பட்டது. அங்கு ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால், மனிதர்கள் உயிர் தப்பி வெளியேற இயலாது. தீயணைப்பு கருவிகளும் அக்கட்டிடத்தில்

பொறுத்தவில்லை. 25.05.2023 அன்று எவ்வித அனுமதியும் மேற்கண்ட கட்டிடத்திற்கு வழங்கப்படவில்லை என்று தகவல் அறியும் சட்டத்தின்கீழ் பதில் பெறப்பட்டது. எனவே அனுமதியின்றியும் பார்க்கிங் வசதி இல்லாமல் இயங்கும் இக்கட்டிட உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவிப்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் 07.08.2025 அன்று நடைப்பெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்ட வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்கள்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10 பகுதி 29 கோட்டம் 130க்கு உட்பட்ட கதவு எண்.21/7, நெற்குன்றம் 1வது தெரு, வடபழனி, சென்னை–26 உள்ள இக்கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்கண்ட கட்டிடம் 14.6.1999 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடம் 24 வருடம் பழமை வாய்ந்ததாகும். மேலும் அனுமதிக்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் 27.06.2023 அன்று Calling for approved plan தாக்கீது வழங்கப்பட்டது. தனியர் அவர்கள் 22.06.2012 அன்று சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் முறைபடுத்துவதற்கு விண்ணப்பித்துள்ளார். வரன்முறை படுத்துவது குறித்து இந்நாள்வரை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் இருந்து முறைபடுத்த ஆணை ஏதும் பெறப்படவில்லை. மேலும் கட்டிடம் வரன்முறை படுத்துவதற்காக அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் தற்போதைய நிலை குறித்து தெரிவிக்க வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கடிதம் 4.6.2025 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சென்னை பெருகர வளர்ச்சி குழுமத்திலிருந்து மனுதாரர் அனுப்பிய மனு நிராகரிக்கப்பட்டது என சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலிருந்துரு 27.6.2025 அன்று பெறப்பட்டது. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மனுதாரர் குறிப்பிட்டுள்ள கட்டிடத்தின் மீது Town & Country Planning Act, 1971–ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்கள்.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனது 27.09.2024 நாளிட்ட புகார் மனுவில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 29, கோட்டம் 130, புதிய எண்.23 பழைய எண்.7, நெற்குன்றம் 1வது தெரு, வடபழனி, சென்னை –26 என்கிற முகவரியில் அக்ஷயா திருமண மண்டபம் அனுமதிக்கு புறம்பாக வணிக வளாகம் , முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளம், பார்க்கிங் வசதி மற்றும் காற்று வசதியில்லாமல் நான்கு புறமும் இடைவெளியில்லாமல் கட்டப்பட்டுள்ளதால் மேற்கண்ட கட்டிடத்தினை இடிக்க உத்தரவு பிறப்பிக்குமாறும் மேலும் இக்கட்டிட உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 29, கோட்டம் 130க்கு உட்பட்ட கதவு எண்.21/7, நெற்குன்றம் 1வது தெரு, வடபழனி, சென்னை–26 உள்ள கட்டிடம் 14.6.1999 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடம் 24 வருடம் பழமை வாய்ந்தது என்பதும், மேலும் அனுமதிக்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், 27.06.2023 அன்று Calling for approved plan தாக்கீது வழங்கப்பட்டு அதன் தொடர்சியாக, தனியர் அவர்கள் 22.06.2012 அன்று சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் முறைபடுத்துவதற்கு விண்ணப்பித்தை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிடத்தின் மீது the Town and Country Planning Act, 1971–ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி

மண்டலம் 10–ன், செயற்பொறியாளரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 29, கோட்டம் 130க்கு, உட்பட்ட வடபழனி, கதவு எண்.21/7, நெற்குன்றம் 1வது தெருவில் அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மூலம் 27.06.2023 நாளிட்ட தாக்கீது வழங்கப்பட்ட நிலையில், கட்டிட உரிமையாளர் கட்டிடம் வரன்முறைபடுத்துவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் சமர்ப்பித்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட நிலையில் அனுமதியற்ற / அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்த மாண்பமை உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதி மன்ற ஆணைகளை கருத்தில் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, மேற்கண்ட கட்டிடத்தின் மீது The Town and Country Planning Act, 1971–ன்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1) திரு. மா.சிவராஜ்,
த/பெ.மாதவராஜ்,
8, வரதராஜாபேட்டை மெயின் ரோடு,
கோடம்பாக்கம், சென்னை–600 024.
2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.
3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
64, NSK சாலை, கோடம்பாக்கம்,
சென்னை–24.
4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

19/11/25
செயலாளர்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032